## கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு

## சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்

**சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளர் (குறு நிதி) பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்களை கோருதல்.**

1. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் பணிப்பாளர்( குறு நிதி) பதவியின் பொருட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.அதன் பொருட்டு தங்களது கல்வித்தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவத்துடனான சுயவிபரத் தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை பதிவுத் **தபாலில் பணிப்பாளர் தலைமை அதிபதி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம், 04 ம் மாடி, செத்சிறிபாய I ஆம் கட்டம், பத்தரமுல்லை** என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **"பணிப்பாளர் (குறு நிதி) பதவியின் பொருட்டு ஆட்சேர்த்துக்கொள்ளல்"** என எழுதுதல் வேண்டும். விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி 21.ம் திகதி ஜூலை மாதம் 2025 ஆகும்.

குறிப்பு :- விண்ணப்ப படிவத்தினை பதிவுத்தபால் மூலம் அனுப்புவது கட்டாயமானதாகும் என்பதுடன் அது தபாலில் காணாமல் போனால் அல்லது தாமதமாகியது என்பது பற்றி மேற்கொள்ளப்படுகின்ற முறைப்பாடுகள் தொடர்பில் கவனத்தில் கொல்லப்படமாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படுகின்ற பாதிப்புக்களை விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

2. இங்கு பூரணப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையானது 01 ஆகும். நியமனம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற திகதி சமுர்த்தி பணிப்பாளர் தலைமை அதிபதியால் தீர்மானிக்கப்படும்.

3. பணியில் ஈடுபடுத்தச் செய்வதற்கான நிபந்தனைகள்

3.1 சேவைத் தொகுதி - SL - 1 - 2025 நிறைவேற்றுனர்

3.2 இப்பதவியானது ஒப்பந்த அடிப்படையிலானதாகும் என்பதுடன் மாதாந்தம் SL - 1 -2025 சம்பளக் குறியீட்டின் கீழ் 133,570.00 இற்கான கொடுப்பனவுடன் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுக்கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, தொலைபேசி கொடுப்பனவு என்பன செலுத்தப்படும்.

3.3 அரசாங்க சேவைகள் நியமனங்கள் தொடர்பில் அரச சேவைகள் ஆணைக்குழுவின் 2310/29 என்ற இலக்கத்தினையுடைய நடை நடைமுறை விதிக்கோவை உரித்துடையதாகும்.

3.4 தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் தாபன விதிக் கோவையின் ஒழுங்குகளுக்கும் நிதிப்பிரமாணங்களுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் வெளியிடப்படுகின்ற பிற பிரமாணங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

4. தகைமைகள்

4.1 கல்வித்தகைமை

4.2 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து அல்லது பட்டம் வழங்கும் நிறுவனம் ஒன்று என்ற வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனம் ஒன்றில் இருந்து வழங்கப்படுகின்ற பட்டம் ஒன்றினை பெற்றிருத்தல்.

4.3 தொழில் தகைமைகள்

குறுநிதித் துறை தொடர்பில் விசேட தேர்ச்சியுடன் 12 வருட வங்கி நடவடிக்கைகள் தொடர்பில் அனுபவத்துடன் வங்கித் துறையிலோ அல்லது நிதி நிறுவனம் ஒன்றிலோ சேவையாற்றி இருத்தல் அல்லது சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ள நிறைவேற்றுனர் தர உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய சகல தகைமைகளை விண்ணப்பப்படிவம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமானதாகும்.

5. பதவிக்குரிய பணிகள்

5.1 சமுர்த்தி குறுநிதி வங்கி வலையமைப்பினை மேம்படுத்துதல், முன்னேற்றுதல் மற்றும் சிறந்த வினைத்திறன் மிக்க மட்டத்தில் பராமரித்து செல்லல்.

5.2 குறு நிதிப் பிரிவுக்குச் சொந்தமான சொத்துக்களை முகாமைத்துவம் செய்தல்.

5.3 மக்களுக்கு கடனை வழங்குதல் உட்பட கடனை அறவிட்டுக்கொள்வதும் திட்டமிட்ட மற்றும் முறைப்படியான பிரகாரம் செயற்படுதல்.

5.4 வங்கிச் சங்கங்களின் செயற்பாட்டினை பலமுள்ளதாக பராமரித்துச் செல்லல்.

5.5 மக்களை வலுவூட்டும் நடவடிக்கைகளின் பொருட்டு கூடுதலான பங்களிப்பினை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

5.6 சமுதாய அடிப்படை வங்கி நடவடிக்கைகளை கண்காணிப்புச் செய்வதும் முன்னேற்றத்தினை ஆய்வு செய்வதும்.

5.7 பணிப்பாளர் தலைமை அதிபதியால் ஒப்படைக்கப்படுகின்ற பிற கடமைகள்.

6. வயதெல்லை -67 வருடங்களுக்கு மேற்படாது இருத்தல் வேண்டும்.

7.7.1 ஆட்சேர்த்துக் கொள்ளும் முறை

இலங்கை நிர்வாக சேவையின் உத்தியோகத்தர் ஒருவரின் தலைமையில் வங்கித் துறையில் நிறைவேற்றுனர் தர உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் நாடு தழுவிய சேவை ஒன்றின் உத்தியோகத்தர் ஒருவரையும் கொண்ட அங்கத்தவர்கள் மூவரடங்கிய நேர்முகப் பரீட்சை சபையொன்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பொருத்தப்பாட்டு மதிப்பீடு ஒன்றின் மூலம் விண்ணப்பதாரிகளிடத்தேயே கூடிய புள்ளிகளை பெற்றுக் கொண்ட விண்ணப்பதாரி ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்தின் பொருட்டு பணிப்பாளர்(குறு நிதி) பதவியில் ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவார்.

7.2 புள்ளிகள் வழங்கப்படும் முறை

| தொடர் இலக்கம் | புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | உச்சபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01 | அனுபவம் | 40 |
| 02 | மேலதிக கல்வி மற்றும் தொழிற் தகைமைகள் | 20 |
| 03 | இத்துறைக்குரியதாக முன் வைத்துள்ள புதிய தோற்றுவாய்களும் வேலைத் திட்டங்களும் | 20 |
| 04 | ஆங்கிலம்/தமிழ்/சிங்கள மொழியில் தேர்ச்சி | 05 |
| 05 | கணினி அறிவு | 05 |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டுகின்ற திறமைகள். | 10 |

குறிப்பு:- மேலே இலக்கம் 03 இன் கீழ் தகவல்களை உறுதிப்படுத்துகின்ற ஆவணங்கள் அல்லது கட்புல,செவிப்புல ஊடகங்களை முன்வைத்தல் வேண்டும்.

சீ.டீ.களுஆரச்சி,
பணிப்பாளர் தலைமை அதிபதி,
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்.